" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2015-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் :** **" அறிவு அற்றம்காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்."**

**பொருள் :** **அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும். அதுவுமன்றிப் பகைவராலும் அழிக்க முடியாத உள் அரணுமாகும்.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) Cw2/005867/2015**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை ந.க.எண்.39371/2014/எச்1 நாள்.02.02.15 தேதிய கடிதத்தின் படியும் மற்றும் துணைதலைவர் இந்திய செஞ்சிலுவை சங்கம் தமிழ்நாடு பிரிவு தேதிய கடிதம் எ18/டிபி/2014 நாள்:12/11/2014-ன் படியும் இந்திய செஞ்சிலுவை சங்கம் தமிழ்நாடு பிரிவிற்கு ஆண்டு சந்தா தொகையாக மாநகராட்சிகளுக்கு ரூ.5000/- என நிர்ணயம் செய்து வழங்கும்படி வரப்பெற்றுள்ளது.

மேற்படி கடிதங்களின்படி இந்திய செஞ்சிலுவை சங்கம் தமிழ்நாடு பிரிவுக்கு மதுரை மாநகராட்சியில் ஆண்டு சந்தா, தொகையாக ரூ.5000/- என்று நிர்ணயம் செய்து வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மானம் எண்.855**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) மநி9/06907/2013**

அரசாணை எண் : 1043 (எம்) உள்ளாட்சி, நகராட்சி துறை நாள்: **05.06.1906** குன்னத்தூர் சத்திரம் தானமாக வழங்கப்பட்ட விபரம் மற்றும் அதன் தொடர்புடைய இதர விபரங்களின் சாராம்சம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளது.

Governmental Memo:2 Date: 03.01.2006ல் குன்னத்தூர் சத்திரம், சாம்பையன் சத்திரம் என **2** தர்ம ஸ்தாபனங்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு சத்திரமும் ஒரு ஹக்தார் மூலம்

நிர்வகிக்கப்பட்டும், முனிசிபாலிட்டியால் மேலாண்மை செய்யப்பட்டும் வந்தது. குன்னத்தூர் சத்திரம் கரியம்மாள் என்னும் ஹக்தார் மூலம் அவரது முகவர் குப்புசாமி அய்யர் என்பவரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. ஹக்தார்கள் வம்சவழியாகவும் மேலும் சிவில் நீதிமன்றங்கள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டும் வந்தது. ஹக்தார்கள் கண்காணிப்பாளர்கள் நிலையில் சத்திரத்தை நிர்வகித்து வந்துள்ளனர். மேற்படி சத்திரத்திற்கு வரும் யாத்திரிகர்களுக்கு தினசரி அன்னதானம் செய்ய ஏற்படும் செலவு குறித்த விபரங்களும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மன்னர்கள் ஆண்ட காலத்தில் பிரசித்தி பெற்ற கோயிலான மீனாட்சி அம்மன் கோயிலுக்கு அருகே அமைந்திருக்கும் குன்னத்தூர் சத்திரத்திற்கு வருகை தரும் யாத்திரிகர்களுக்கு நாளென்றுக்கு 105 நபர்களுக்கு (90 யாத்ரிகர்கள் + சத்திரத்தில் பணியாற்றும் 15 நபர்கள்) அன்னதானம் செய்ய குன்னத்தூர் உள்ளிட்ட இதர நான்கு கிராமங்கள் தானமாக வழங்கப்பட்டு இருந்தது என்றும், அதன்பின்னர் அக்கிராமங்களை அரசாங்கம் திரும்ப எடுத்துக்கொண்டு அன்னதானம் மற்றும் மீனாட்சி அம்மன் கோவில தினசரி வழிபாடு செய்வதற்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி சத்திரத்தில் பணியாற்றிய ஹக்தாரினிகளுக்கு அருகில் உள்ள மீனாட்சி அம்மன் கோவிலுக்கு தினசரி வழிபாடு செய்வதற்கும், சத்திரத்திற்கு வருகை தரும் யாத்ரிகர்களுக்கு அன்னதானம் செய்வதற்கும் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் மூலம் தினமும் சத்திரத்திற்கு வரும் 105 நபர்களுக்கு உணவளிக்க வேண்டும் என்றும் மேலும் சித்திரை திருவிழாவில் அருள்மிகு கள்ளழகர் ஆற்றில் இறங்கும் வைபவத்தன்று வண்டியூரிலிருந்து வரும் நபர்களுக்கு உணவளிக்க செலவிடப்பட வேண்டும் என்றும், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் வழிபாட்டிற்கு வரும் யாத்திரிகர்களுக்கு தினசரி உணவளிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஹக்தார் கரியம்மாளின் முகவரான குப்புசாமி அய்யரின் வாரிசுதாரர் குன்னத்தூர் சத்திரத்தில் திருமதி.கிருஷ்ணமாள் என்பவர் கடந்த 40 வருடங்களாக பணியாற்றியதாலும், அவர் இறந்த பின்பு அவரது வாரிசுதாரர் திரு.M.மீனாட்சிசுந்தரம், ஹக்தார் மற்றும் இவரது மனைவி திருமதி.M.பாக்கியம், ஹக்தாரினியின் வாரிசுதாரர்களே இருந்து வந்துள்ளனர்.

இந்நிலையில் குன்னத்தூர் சத்திரம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், கட்டிடத்தை இடிந்து வணிக வளாகம், தங்கும் அறைகள், நவீன அறைகள் கட்டவும், மேற்கண்ட கட்டிடம் கட்டுவதற்கு அறக்கட்டளையின் சார்பில் செலவு செய்வதற்கும், மாமன்ற தீர்மான எண்: 354 நாள்: 14.10.2005ல் ஒப்புதல் அளித்துள்ளனர். மேற்கண்ட குன்னத்தூர் சத்திரம் இடிக்கப்பட்ட பின்பு, இரண்டு ஹக்தார் மற்றும் ஹக்தாரினியும் கருப்பட்டி சத்திரத்தில் வாட்டர் கேரியராக பணிபுரிந்து வருகின்றனர்.

எனவே, மேற்கண்ட வாரிசுதார்களான திரு.M.மீனாட்சி சுந்தரம் மற்றும் அவரது மனைவி திருமதி.M.பாக்கியலட்சுமி ஆகிய இருவருக்கும் தலா ரூ.3,000/- வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட நபர்களின் ஏழ்மையை கருத்திற்கொண்டும், தலா ஒரு நபருக்கு மாதம் ஊதியமாக ரூ.4,000/- வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>தீர்மானம் எண்.856</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**3) <u>மதி1/001151/14</u>**

மதுரை மாநகராட்சி, மேல்மதுரை கிராமம், மண்டலம் 1, போடி லைன் எல்லீஸ் நகர், புல எண்.218,219/A/4 (டி.எஸ்.எண்.5/5,6/34) புலங்களில் வீடு கட்டி குடியிருக்கும் மக்களுக்கு இலவச மனை பட்டா வழங்க மாநகராட்சியால் மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி தடையின்மை சான்று வழங்கியதை திருத்தம் செய்து தருமாறு திருப்பரங்குன்றம் வட்டாட்சியர் அவர்களால் கோரப்பட்டது.

ஏற்கனவே கோப்பு எண்.மதி1/663/2011, நாள் 09.02.2011ல் மாமன்ற தீர்மானம் எண்.1047, நாள் 09.02.2011 மேல் மதுரை கிராமம் புல எண்.218/8 மற்றும் 219/A4 ல் வீடு கட்டி குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையில்லையென என தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மதுரை தெற்கு வட்டாட்சியர்க்கு அனுப்பப்பட்டு இருந்தது.

தற்போது திருப்பரங்குன்றம் வட்டாட்சியர் அவர்களின் ந.க.எண்.10319/2013/சி, நாள் 24.03.2015ந் தேதிய கடிதத்தில் மேற்படி சர்வே எண்கள் மாடக்குளம் கிராமத்தின் கட்டுப்பாட்டிற்குள் வருவதால் மேல் மதுரை கிராமம் என்பதற்கு பதிலாக மாடக்குளம் கிராமம் என மாற்றி தீர்மான நகல் வழங்க கோரியுள்ளார்.

தற்போது மாநகராட்சி நில அளவை ஆவணங்களின்படி மாடக்குளம் கிராமம், பழைய புல எண்.218/8 மற்றும் 219/A4 ஆகிய புல எண்கள் புதிய சர்வே வார்டு XXII, பிளாக் 34, TS NO.5/5 மற்றும் TS NO.6/34ல் தீர்வை ஏற்படாத தரிசு என உள்ளது. எனவே, மேற்படி சர்வே எண்ணில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க ஆட்சேபனையில்லையென சான்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.857**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) ந.க.எண்.மதி 2/005693/2015**

மதுரை மாநகராட்சி வார்டு 27 மைய நகரமைப்பு பிரிவு சர்வே வார்டு எண் XVI, பிளாக் எண்.6, நகரளவு எண் 23/1–ல் 20 செண்ட் இடம் சிறுபான்மையினர் மாணவியர் விடுதி கட்டிடம் கட்ட சிறுபான்மை நலத்துறைக்கு நில மாற்றம் செய்திட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மதுரை அவர்களின் ந.க.எண்.பிந1/74961/2013/ நாள்: 23.02.2015 ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட இடத்தின் விஸ்தீரணம் 03980.5 ச.மீ ஆகும் (96 செண்டு) மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் சட்டப் பேரவையில் விதி எண்110- ன் கீழ் அறிவிப்பு செய்யப்பட்டதின்படி அரசு சிறுபான்மையினர் நல பள்ளி மாணவியர் விடுதி அமைக்கும் பொருட்டு சிறுபான்மையினர் நலத்துறைக்கு 20 செண்ட் இடத்தினை மட்டும் நில மாற்றம் செய்வதற்கு ஆட்சேபனை இல்லா சான்று (NOC) வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.858**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5) மதி 2/038482/14**

மதுரை மாநகராட்சி சர்வே வார்டு எண்.XVI, தல்லாகுளம் கிராமம், சர்வே எண்.54/2, பிளாக் எண்: 6, நகரளவு எண் 23/2-ல் 3.70 ஏக்கர் பரப்பளவு அரசு புறம்புகல் நிலம் உள்ளது. மேற்கண்ட இடம் நிலஅளவை ஆவணங்களில் ரோடு என உள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் மதுரை அவர்களின் ந.க.எண்.54354/2010/12, நாள் 24.09.2010–ல் மேற்கண்ட இடத்தில் சமூக நலக்காடுகள் அமைக்க 13 செண்ட் இடத்தினை வனத்துறைக்கு நிலமாற்றம் செய்து உத்தரவிடுவதை எதிர்பார்த்து முன் நுழைவு அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

மாவட்ட வனஅலுவலர் அவர்களின் நேர்முக கடித எண்:D1/8547/2014, நாள் 11.12.14-ல் கீழ்க்கண்டுள்ள விபரபடியான நிலத்தினை வனத்துறைக்கு நிலமாற்றம் செய்ய மாமன்ற தீர்மானம் நிறைவேற்றிட தெரிவித்துள்ளார்.

| வட்டம் மற்றும் கிராமம் | புல எண் | மொத்த விஸ்தீர்ணம் | உத்தேச உட்பிரிவு எண் | நிலமாற்றம் செய்யப்பட உள்ள பரப்பு |
|---|---|---|---|---|
| மதுரை வடக்கு வட்டம், தல்லாகுளம் கிராமம் | ந.நி.எண்.23/2<br>புல எண்.54/2 | 3.70 ஏக்கர் | 23/6 | 0.13 ஏக்கர் |

எனவே மாவட்ட ஆட்சியர் அவர்களின் முன் நுழைவு அனுமதி உத்திரவின்படியும் மாவட்ட வனஅலுவலர் அவர்களின் நேர்முக கடிதத்தின் அடிப்படையிலும் இவ்வலுவலக நகரஅளவை ஆவணங்களின் அடிப்படையிலும் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறு இல்லாமல் மீதமுள்ள இடத்தினை மாநகராட்சியின் எதிர்காலத் தேவைக்கு பயன்படுத்தும் வகையில் சமூக நலக் காடுகள் அமைப்பதற்கு தேவையான 13 செண்ட் நிலத்தினை வனத்துறைக்கு நிலமாற்றம் செய்ய மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.859**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6) H6/18719/2010**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட செல்லூரில் நகர்ப்புற ஏழைகளுக்கான இரவு நேர தங்கும் விடுதியை பராமரித்து வர மாதந்தோறும் ரூ.30,000/- மதுரை மாநகராட்சி பொது நிதி மூலம் Madurai Jesuits Down Trodden People Welfare Trust நிறுவனத்தாருக்கு வழங்க மாமன்றத்தில் குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்நிலையில் மேற்படி விடுதியை நடத்த நிதி மற்றும் நிர்வாக காரணங்களால் பராமரிக்க இயலாததால் Madurai Jesuits Down Trodden People Welfare Trust நிறுவனத்தாருக்கு பதிலாக Mother Terasa Educational Trust நிறுவனத்தார் பராமரித்து வர உத்தரவிடப்பட்டுள்ளதால், அவ்விடுதியை சிறப்பாக நடத்த மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மார்ச் 15 முதல் மாத மாதம் மேற்கண்ட தொகையை சம்பந்தப்பட்ட Mother Terasa Educational Trust நிறுவனத்தாருக்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் பின்னேற்பைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மானம் எண்.860**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

7) <u>ம.பொ.4/ம.எண்.837/13-14</u>

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண் 6ல் உள்ள செல்லூர் மருத்துவமனையை இடித்து புதியதாக Multi Speciality Hospital கட்டிடம் முதல்தளம் கட்டும் பணிக்கு ரூ.84.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்ற தீர்மானம் எண்.499, நாள் 18.10.2013ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. பின்னர் "E" டெண்டர் முறையில் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன. அதில் L1 ஒப்பந்ததாரர் திரு.S.நெடுமாறன், 65, பசுபதி தெரு, செல்லூர், மதுரை என்பவர் மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு (2013-14ம் ஆண்டு) 4.86% கூடுதலாக கொடுத்துள்ளதற்கு அன்னாரிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் மதிப்பீட்டு விலைக்கே (2013-14) வேலை செய்து தர சம்மதக்கடிதம் கொடுத்துள்ளதை ஏற்று, அன்னாருக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மதிப்பீட்டிற்கு முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்ட வேலை உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதல் செய்யக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>தீர்மானம் எண்.861</u>

<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

8) <u>ம.பொ. 2/ம.எண். 1 (IUDM)/14-15</u>

மதுரை மாநகராட்சி தற்போது 17 உள்ளாட்சி அமைப்புகளுடன் 72 வார்டுகளிலிருந்து 100 வார்டுகளாக விரிவடைந்துள்ளது. மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள வார்டுப் பகுதிகளில் உள்ள பிரதான மற்றும் முக்கிய போக்குவரத்து சாலைகளை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு நடப்பாண்டில் சீரமைக்க வேண்டி 26.45 கி.மீ. நீளத்திற்கு ரூ. 1053.20 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு "ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் 2014–15ன்" கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பணியின் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | வார்டு எண் | தலைப்பு | பணியின் விபரம் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* |
| 1 | 1 | தார் சாலை | சொக்கலிங்க நகர் 1வது தெரு, கிருஷ்ணசாமி தெரு மற்றும் ராஜ் நகர் 3வது தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 450.00 | 6.00 | 23.00 |
| 2 | 2 | தார் சாலை | செக்டார் 6வது மற்றும் அன்பு நகர் பகுதிகளில் தார் சாலை அமைத்தல் | 670.00 | 4.00 | 20.00 |
| 3 | 3 | தார் சாலை | அருணாச்சலம் நகர் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 365.00 | 6.00 | 22.00 |
| 4 | 4 | தார் சாலை | எல்.ஐ.ஜி காலனி 1வது முதல் 4வது தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 820.00 | 6.00 | 24.50 |
| 5 | 23 | தார் சாலை | வருமானவரி காலனி 1வது முதல் 4வது மற்றும் குறுக்குத் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 785.00 | 4.00 | 30.00 |
| 6 | 24 | தார் சாலை | திருப்பாலை ஆதிபராசக்தி நகர் பகுதிகளில் தார் சாலை அமைத்தல் | 880.00 | 4.00 | 25.00 |
| 7 | 24 | தார் சாலை | TWAD காலனி 2வது தெரு மற்றும் குரு நகர் மெயின் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 660.00 | 4.00 | 21.00 |
| 8 | 25 | தார் சாலை | பாரத் நகர் மெயின் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 360.00 | 4.00 | 14.00 |
| 9 | 25 | தார் சாலை | சக்தி நகர் மெயின் தெருவில் தார் சாலை அமைத்தல் | 350.00 | 4.00 | 10.00 |

| வ. எண். | வார்டு எண் | தலைப்பு | பணியின் விபரம் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* |
| 10 | 26 | தார் சாலை | மகாலெட்சுமி நகர் 3வது தெரு மற்றும் குறுக்குத் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 860.00 | 4.00 | 30.00 |
| 11 | 28 | தார் சாலை | ஸ்ரீராம் நகர் பகுதிகளில் தார் சாலை அமைத்தல் | 875.00 | 6.00 | 35.00 |
| 12 | 29 | பேவர் பிளாக் சாலை | அனுமார்பட்டி நடுத் தெரு, வடக்குத் தெரு மற்றும் பாரதி நகர் 1வது தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 200.00 | 3.00 | 9.00 |
| 13 | 29 | பேவர் பிளாக் சாலை | மாரியம்மன் கோவில் குறுக்குத் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 400.00 | 4.00 | 22.40 |
| 14 | 30 | தார் சாலை | வித்க்கார வீதி, வள்ளளலார் குறுக்குத் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 540.00 | 5.00 | 22.50 |
| 15 | 30 | பேவர் பிளாக் சாலை | ஏ.டி. காலனி மற்றும் அன்சாரி தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 320.00 | 4.00 | 18.00 |
| 16 | 31 | தார் சாலை | யாகப்பா நகர் 1வது,2வது மற்றும் 3வது தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 700.00 | 5.50 | 29.80 |
| 17 | 31 | பேவர் பிளாக் சாலை | திருவள்ளுவர் தெரு மற்றும் குறுக்குத் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 190.00 | 4.50 | 9.00 |
| 18 | 32 | தார் சாலை | சதாசிவம் நகர், திருநாவுக்கரசர் தெரு, தோனி தெரு மற்றும் பாரி தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 404.00 | 5.50 | 22.50 |
| 19 | 48 | தார் சாலை | ஐலேண்ட் நகர் 1வது முதல் 4வது தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 855.00 | 4.00 | 25.00 |
| 20 | 49 | தார் சாலை | நாகனாகுளம் மயானக்கரை மெயின் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 620.00 | 4.00 | 25.00 |
| 21 | 55 | தார் சாலை | சின்ன காதியனுர், வேலன் தெரு, வள்ளலார் தெரு, சோழபுரம், கணேச்ன மெயின் மற்றும் குறுக்குத் தெருக்கள், தெய்வகன்னி தெருவில் தார் சாலை அமைத்தல் | 1263.00 | 5.00 | 54.00 |
| 22 | 56 | தார் சாலை | ராஜமான் நகர் கண்மாய்கரை மெயின் சாலையில் தார் சாலை அமைத்தல் | 1100.00 | 4.00 | 49.50 |
| 23 | 56 | பேவர் பிளாக் சாலை | தாய் நகர் குறுக்குத் தெரு மற்றும் சோணையா நகர் பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 232.00 | 4.00 | 14.40 |
| 24 | 58 | பேவர் பிளாக் சாலை | செட்டியார் தெரு, பசும்பொன் தெரு, யாதவர் குறுக்குத் தெரு, தபால் அலுவலகம் குறுக்குத் தெரு, கீழ்த் தெரு குறுக்கு பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 760.00 | 4.00 | 47.50 |
| 25 | 59 | தார் சாலை | அன்னை அபிராமி மெயின், 1வது குறுக்குத் தெரு, கணபதி நகர் | 1405.00 | 4.00 | 50.00 |

| வ. எண். | வார்டு எண் | தலைப்பு | பணியின் விபரம் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* |
| | | | மெயின் தெரு, ஆசாத் தெரு, நாகம்மாள் கோவில் தெரு, பகவத் சிங் தெரு, ராதாகிருஷ்ணன் மெயின், வடக்கு, கிழக்கு குறுக்குத் தெரு, திருமலை தெரு, ராஜா 1வது,2வது தெரு, வீர சிவாஜி 1வது, 2வது தெரு, குறிஞ்சி தெரு, செவ்வந்தி தெரு மற்றும் முல்லை தெருக்களில் தார் சாலை அமைத்தல் | | | |
| 26 | 60 | தார் சாலை | உயர்நிலைப்பள்ளி பின்புறம் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 380.00 | 4.00 | 19.00 |
| 27 | 60 | பேவர் பிளாக் சாலை | ஜெ.ஜெ. நகர் குறுக்குத் தெரு, பிரசன்னா காலணி மெயின், 6வது, 8வது, 10வது தெருக்களில், நியூ காலணி மற்றும் துக்காராம் மெயின் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 685.00 | 4.00 | 38.00 |
| 28 | 61 | தார் சாலை | வில்லாபுரம் புதுத் தெரு, இபி காலணி, சந்தியா மோட்டார் கிழக்க பக்கம், லிட்டில் டைமண்ட் பள்ளி எதிர்புறம், லட்சுமி டீ ஸ்டால் எதிர்புறம் பகுதிகளில் தார் சாலை அமைத்தல் | 1005.00 | 4.00 | 37.90 |
| 29 | 62 | தார் சாலை | ராஜாமான் நகர் மெயின் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 580.00 | 4.00 | 24.50 |
| 30 | 62 | தார் சாலை | ராஜாமான் நகர் குறுக்குத் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 525.00 | 4.00 | 22.30 |
| 31 | 62 | பேவர் பிளாக் சாலை | சோனையர் கோவில் தெரு, குறுக்குத் தெரு மற்றும துளசிராம் குறுக்குத் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 273.00 | 2.50 | 10.80 |
| 32 | 94 | தார் சாலை | காவேரி நகர் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 650.00 | 4.00 | 22.50 |
| 33 | 94 | தார் சாலை | ஸ்ரீ ராம் மற்கும் ஆறுமுகம் நகர் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 1050.00 | 5.00 | 35.00 |
| 34 | 95 | பேவர் பிளாக் சாலை | செமினரி தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 180.00 | 3.70 | 10.00 |
| 35 | 95 | தார் சாலை | விநாயகா நகர் தெருக்களில் சாலை அமைத்தல் | 500.00 | 4.50 | 15.50 |
| 36 | 96 | தார் சாலை | திருமலையூர் சாலைப் பகுதியில் சாலை அமைத்தல் | 1000.00 | 4.00 | 27.60 |
| 37 | 96 | தார் சாலை | SRV நகர் மெயின் மற்றும் குறுக்குத் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 680.00 | 5.00 | 46.50 |
| 38 | 97 | தார் சாலை | ராமன் தெரு, நேதாஜி தெரு மற்றும் சௌபாக்யா தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 1500.00 | 4.50 | 46.50 |
| 39 | 98 | தார் சாலை | சொர்ணம் காலணி பகுதிகளில் தார் சாலை அமைத்தல் | 680.00 | 5.00 | 22.50 |

| வ. எண். | வார்டு எண் | தலைப்பு | பணியின் விபரம் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* |
| 40 | 98 | தார் சாலை | இந்திரா காந்தி தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 700.00 | 4.50 | 21.50 |
| | | | **மொத்தம்** | **26452.00** | | **1053.20** |

மேற்கண்டவாறு பணிகளை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.862**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) ம3எ6/09524/14**

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு 71 ஐ.ஐ. மணல் சாலையில் அழகர் திருமணமண்டபம் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. கட்டிடத்தின் பிரதான Pierகளின் Reinforcement Expose-ஆன நிலையிலும் Portico Roof slab மற்றும் sunshade களின் Roof slab பழுதடைந்த நிலையில் கீழேவிழும் நிலையில் உள்ளது. கட்டிடத்தின் தளம் இறங்கியுள்ளது. கட்டிடத்தின் பிரதான Pierகளின் அஸ்திவாரம் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், கட்டிடத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிசெய்ய இயலவில்லை. ஆணையாளர் அவர்களால் கட்டிடத்தை தல பார்வையிடப்பட்டது. தலபார்வையின் போது கட்டிடத்தின் Stability சம்பந்தமாக Private Structural Engineerயிடம் அறிக்கை பெற்று அதன்பேரில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

M/S VINCENT ASSOCIATES நிறுவனத்தினருடன் தல ஆய்வு செய்யப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. தங்களது அறிக்கையில் பழுதடைந்த கட்டிடத்தை Modern Technique முறையில் சிறந்த பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையின் மூலமே மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்துள்ளனர். மராமத்து பணிகள் செய்து புதுப்பிப்பதற்கு ஆகும் செலவுத்தொகைக்கு கட்டிடத்தின் Life Period 15 வருடங்கள் எனவும் மேலும் அடிக்கடி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என தெரிவித்துள்ளனர்.

கட்டிடத்தின் பிராதன Critical Pierகளின் அஸ்திவாரம் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதால் கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்ட பரிந்துரை செய்து அறிக்கை அளித்துள்ளனர்.

M/S VINCENT ASSOCIATES நிறுவனத்தினர் அளித்துள்ள சான்றின்படி கட்டிடம் ஸ்திரத்தன்மை இல்லாமல் இருப்பதால் பழுதடைந்த திருமணமண்டபம் கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டுவதற்கு மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மானம் எண்.863**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) மநி.6/001704/2015**

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு 2-ல் பணிபுரிந்து வரும் திரு.தாஸ்பெனடிக்ட்/சந்தானம், துப்புரவு ஊழியர் தனது தாயார் மற்றும் இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ள தனது மனைவியும் தொடர்ந்து சிகிச்சையில் உள்ளார் எனவும், தனது குடும்பம் திண்டுக்கலில் உள்ளது எனவும் தெரிவித்து தனக்கு மதுரை மாநகராட்சியிலிருந்து திண்டுக்கல் மாநகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதல் செய்து வழங்க கோரியுள்ளார்.

எனவே, தனியாரின் குடும்ப சூழ்நிலை கருத்திற்கொண்டு மதுரை மாநகராட்சியிலிருந்து திண்டுகல் மாநகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதல் செய்ய மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மானம் எண்.864**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11) மநி25/024781/2014**

மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட திருப்பரங்குன்றம் நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்த திரு.செ.நாகராஜன் தற்போது மதுரை மாநகராட்சியில் வருவாய் உதவியாளராக பணியாற்றி வருகிறார். அன்னார் குடும்ப சூழ்நிலை காரணமாக அறந்தாங்கி நகராட்சியில் ஒருவழி பணிமாறுதலில் செல்ல அனுமதி கோரியுள்ளார்.

திரு.செ.நாகராஜன் வருவாய் உதவியாளர், மதுரை மாநகராட்சியில் பணிபுரிபவரை அறந்தாங்கி நகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதல் செல்ல அனுமதி கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மானம் எண்.865**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மதுரை** **மேயர்**
**நாள் : 17.04.2015** **மதுரை மாநகராட்சி**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி
# மாமன்றக் கூட்டம்

**2015-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 12.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) ம.பொ. 4/ ம.எண். 859/13–14**

மதுரை மாநகராட்சி, மண்டலம் 3 மற்றும் மண்டலம் 4 பகுதிகளுக்குட்பட்ட வார்டுகளில் அமைந்துள்ள தெருவிளக்குகளில் பழுதுகள் ஏற்பட்டால் அதனை உடனுக்குடன் சரி செய்யவும் மற்றும் இதர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மண்டலத்திற்கு ஒரு SKY LIFT வாகனம் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டு, இவ்வாகனத்தின் சிறப்பு அரசு விலை விகிதத்தின் படி (Special Government Rate) வாகனம் ஒன்றிற்கு ரூ. 28.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இரண்டு வாகனங்களுக்கு மொத்தம் ரூ. 56.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டுத் தொகையாகும். மேற்கண்ட வாகனத்தின் உத்தேச மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள கடந்த 21.11.2013 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 535, நாள். 21.11.2013) ஒப்புதல் பெறப்பட்டு கடந்த 31.07.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு:

1. M/s. N.S. Ramarao Body Works, Chennai.
2. M/s. G.S. Body Builders (Pvt.) Ltd., Kanchipuram

மேற்கண்டவாறு இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப ஒப்புதல் குழு முன்னிலையில் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களின் தொழில் நுட்ப தகுதிகள் இக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1. M/s. N.S. Ramarao Body Works, Chennai.
2. M/s. G.S. Body Builders (Pvt.) Ltd., Kanchipuram

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் தொழில் நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதால் இரண்டு நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது. அவ்வாறு திறக்கப்பட்ட விலைப்புள்ளியில் M/s. G.S. Body Builders (Pvt.) Ltd., Kanchipuram நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.11% குறைவாக தெரிவித்துள்ளதை ஏற்று, பணியின் அவசியத்தினைக் கருத்தில் கொண்டு கடந்த 19.12.2014 அன்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று இந்நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

எனவே முன் ஒப்புதல் பெறப்பட்ட வேலை உத்திரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>**தீர்மானம் எண்.866**</u>

<u>**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**</u>

## 2) <u>ம.பொ. 4/ ம.எண். 860/13–14</u>

மதுரை மாநகராட்சி, மண்டலம் 1 மற்றும் மண்டலம் 2 பகுதிகளுக்குட்பட்ட வார்டுகளில் அமைந்துள்ள தெருவிளக்குகளில் பழுதுகள் ஏற்பட்டால் அதனை உடனுக்குடன் சரி செய்யவும் மற்றும் இதர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மண்டலத்திற்கு ஒரு SKY LIFT வாகனம் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டு, இவ்வாகனத்தின் சிறப்பு அரசு விலை விகிதத்தின் படி (Special Government Rate) வாகனம் ஒன்றிற்கு ரூ. 28.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இரண்டு வாகனங்களுக்கு மொத்தம் ரூ. 56.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டுத் தொகையாகும். மேற்கண்ட வாகனத்தின் உத்தேச மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள கடந்த 21.11.2013 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 535, நாள். 21.11.2013) ஒப்புதல் பெறப்பட்டு கடந்த 31.07.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு:

1) M/s. N.S. Ramarao Body Works, Chennai.
2) M/s. G.S. Body Builders (Pvt.) Ltd., Kanchipuram
3) M/s. Usha Engineer, Ghaziabad.

மேற்கண்டவாறு மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப ஒப்புதல் குழு முன்னிலையில் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களின் தொழில் நுட்ப தகுதிகள் மட்டும் இக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1) M/s. N.S. Ramarao Body Works, Chennai.
2) M/s. G.S. Body Builders (Pvt.) Ltd., Kanchipuram

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் தொழில் நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதால் இரண்டு நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது. அவ்வாறு திறக்கப்பட்ட விலைப்புள்ளியில் M/s. G.S. Body Builders (Pvt.) Ltd., Kanchipuram நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.11% குறைவாக தெரிவித்துள்ளதை ஏற்று, பணியின் அவசியத்தினைக் கருத்தில் கொண்டு கடந்த 19.12.2014 அன்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று இந்நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

எனவே முன் ஒப்புதல் பெறப்பட்ட வேலை உத்திரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>**தீர்மானம் எண்.867**</u>

<u>**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**</u>

## 3) <u>ம.பொ. 1/ 033692 /13</u>

மதுரை மாநகராட்சி, தற்போது 100 வார்டுகளாக மாறியுள்ள நிலையில் இவ்வார்டுகளில் உள்ள சாலைகளில் மண்கள் அதிகளவில் தேங்குவதால் சாலை விபத்துகள் மற்றும் பொதுமக்களுக்கு சுகாதார கேடுகளை ஏற்படுத்துகின்றது. இதனை கருத்தில் கொண்டு மண் அகற்றும் இயந்திர வாகனம் (TRUCK MOUNTED SWEEPING MACHINE) வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டு, சிறப்பு அரசு விலை விகிதத்தின் படி (Special Government Rate) வாகனம் ஒன்றின் விலை ரூ. 45.00 இலட்சமாகும். மேலும் 100 வார்டுகளுக்கு ஒரு வாகனம்

போதுமானதாக இருக்காது என்ற காரணத்தினால், இரண்டு வாகனங்கள் ரூ. 90.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டுத் தொகையில் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டது. இவ்வாகனத்தின் உத்தேச மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள கடந்த 21.11.2013 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 531, நாள். 21.11.2013) ஒப்புதல் பெறப்பட்டது. தேர்தல் நன்னடத்தை காரணமாக மேற்கண்ட இரண்டு வாகனங்கள் வாங்காமல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. மேலும் இக்கால கட்டத்தில் ஒரு வாகனத்தின் விலை ரூ. 45,00,000/- லிருந்து ரூ. 51,88,000/- ஆக விலை உயர்ந்தது. எனவே ஆணையாளர் அவர்களின் அறிவுரையின் பேரில் முதற்கட்டமாக ஒரு வாகனம் மட்டும் வாங்குவதற்கு ஒப்புதல் பெறப்பட்டு, கடந்த 11.06.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. அவற்றில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு:

1. M/s. TPS Infrastructure Ltd., Chennai.
2. M/s. Roots Multiclean Ltd., Coimbatore.

மேற்கண்டவாறு இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப ஒப்புதல் குழு முன்னிலையில் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனத்தின் தொழில் நுட்ப தகுதிகள் மட்டும் இக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

3. M/s. TPS Infrastructure Ltd., Chennai.

மேற்கண்ட நிறுவனத்தின் தொழில் நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதால் இந்நிறுவனத்தின் விலைப்புள்ளி திறக்கப்பட்டது. அவ்வாறு திறக்கப்பட்ட விலைப்புள்ளியில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 1.81% குறைவாக தெரிவித்துள்ளதை ஏற்று, பணியின் அவசியத்தினைக் கருத்தில் கொண்டு கடந்த 16.07.2014 அன்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று இந்நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

எனவே முன் ஒப்புதல் பெறப்பட்ட வேலை உத்திரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>தீர்மானம் எண்.868</u>**

**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

## 4) ம.பொ. 1/ 15769 / 2014

மதுரை மாநகராட்சியானது 72 வார்டுகளிலிருந்து 100 வார்டுகளாக விரிவடைந்துள்ள நிலையில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அடைப்பினை சரி செய்ய ஏற்கனவே இரண்டு வாகனங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் கூடுதலாக இரண்டு வாகனங்கள் உத்தேசிக்கப்பட்டு, இவ்வாகனத்தின் சிறப்பு அரசு விலை விகிதத்தின் படி (Special Government Rate) வாகனம் ஒன்றிற்கு ரூ. 30.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இரண்டு வாகனங்களுக்கு மொத்தம் ரூ. 60.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டுத் தொகையாகும். மேற்கண்ட வாகனத்தின் உத்தேச மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள கடந்த 29.05.2014 அன்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு கடந்த 19.06.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு:

1. M/s. N.S. Ramarao Body Works, Chennai.
2. M/s. G.S. Body Builders (Pvt.) Ltd., Kanchipuram

மேற்கண்டவாறு இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப ஒப்புதல் குழு முன்னிலையில் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களின் தொழில் நுட்ப தகுதிகள் இக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1. M/s. N.S. Ramarao Body Works, Chennai.
2. M/s. G.S. Body Builders (Pvt.) Ltd., Kanjipuram

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் தொழில் நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதால் இரண்டு நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது. அவ்வாறு திறக்கப்பட்ட விலைப்புள்ளியில் M/s. N.S. Ramarao Body Works, Chennai நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.16% குறைவாக தெரிவித்துள்ளதை ஏற்று, பணியின் அவசியத்தினைக் கருத்தில் கொண்டு கடந்த 16.07.2014 அன்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

எனவே மேற்கண்ட விபரப்படி முன் ஒப்புதல் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதல் மற்றும் வேலை உத்திரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.869**
**மாநகராட்சியின் நிதி ஆதாரத்தினை கருத்திற்கொண்டு மாநகராட்சியின் பங்கு தொகையினை அரசின் மானியமாக பெறுவதற்கு அரசுக்கு கருத்துரு அனுப்பி வைத்து நிதிபெறவும் தற்போது கொடுத்துள்ள விலைப்புள்ளிகளை ஏற்றும் தீர்மானிக்கப்படுகிறது.**

5) **ம.பொ.4/017333/2012-13**

மதுரை மாநகராட்சியில் வைகை குடிநீர் திட்டம்-I மற்றும் II திட்டங்களின் மூலம் மதுரை மாநகராட்சியின் பழைய வார்டுப் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் மதுரை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட வார்டுப் பகுதிகளுக்கு வைகை ஆற்றுப்படுகையில் அமைக்கப்பட்டுள்ள நீர்உறிஞ்சு கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் பெறப்படும் நீரைக் கொண்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. குடிநீர் விநியோகம் சீராக இல்லாத பகுதிகட்கு தனியார் மற்றும் மாநகராட்சி லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.
மதுரை மாநகராட்சிக்கு வைகை ஆற்றுப்படுகையின் மூலம் குடிநீர் வழங்கும் திட்டங்களில் ஒன்றான மணலூர் மற்றும் திருப்புவனம் திட்டத்தின் தலைமை நீரேற்று நிலையத்தினை புனரமைப்பு செய்யவும், மணலூர் நீர் உறிஞ்சு கிணற்றில் பெறப்படும் குடிநீரினை சுத்திகரிப்பு செய்து குடிப்பதற்கு உகந்ததாக மாற்றவும், இக்குடிநீர் திட்டத்திலிருந்து மாநகராட்சிக்கு விசையுந்து செய்து குடிநீர் எடுத்து செல்லும் AC குழாய்கள் மிகவும் பழமையானதாக உள்ளதால் அடிக்கடி உடைந்து குடிநீர் வீணாவதாலும் மற்றும் பல இடங்களில் குடிநீர் கசிவு அடிக்கடி ஏற்படுவதால் பழைய பிரதானக் குடிநீர் குழாய்களை மாற்றியமைக்கவும் மதிப்பீடு தயார் செய்து IUDM திட்டத்தின் கீழ் ஒப்புதல் கேட்கப்பட்டது. தமிழக அரசும் IUDM திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு கீழ்க்கண்டவாறு செய்யப்பட்டது.

| வரிசை எண் | வேலையின் பெயர் | திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | நிதி ஆதாரம் | |
|---|---|---|---|---|
| | | | மான்யம் | உள்ளாட்சி அமைப்பு நிதி |
| 1. | திருப்புவனம் முத் மணலூர் நீரேற்று வரையுள்ள 350மி.மீ விட்டமுள்ள AC குழாய்களை மாற்றி 350 மி.மீ விட்டமுள்ள DI குழாய்களை பதித்தல்(சிப்பம்–1) | 227.00 | - | 227.00 (மாநகராட்சி பொது நிதி) |
| 2. | மணலூர் நீரேற்று நிலையத்தில் 5 MLD கொள்ளளவு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் (சிப்பம்–2) | 370.00 | - | 370.00 (மாநகராட்சி பொது நிதி) |
| 3. | மணலூர் நீரேற்று நிலையத்திலிருந்து மதுரை மாநகரம் வரையுள்ள 450 மி.மீ விட்டமுள்ள AC குழாய்களை மாற்றி 450 மி.மீ விட்டமுள்ள DI குழாய்கள் பதித்தல் (சிப்பம்–3) | 1043.00 | 600.00 | 443.00 (மாநகராட்சி பொது நிதி) |
| | **மொத்தம்** | **1640.00** | **600.00** | **1040.00** |
| | | | | |

மேற்கண்ட திட்டத்தினை மூன்று சிப்பங்களாக நிர்வாக ஒப்புதல், தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 350 மி.மீ விட்டமுள்ள DI மெயின் திருப்புவனம் கிணற்றிலிருந்து மணலூர் தரைமட்ட தொட்டி வரை பதிப்பதற்கு 1) M/s VDB MKI(JV), Bangalore, 2) M/s Sachin Construction, Madurai. மற்றும் 3) S.Nedumaran, மதுரை ஆகிய மூன்று நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த புள்ளி பெறப்பட்டது. தொழில் நுட்ப கமிட்டி ஆய்வு செய்து தொழில் நுட்ப ரீதியாக S.Nedumaran, மதுரை என்ற நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு, விலைப்புள்ளி திறக்கப்பட்டது. இது டெண்டரில் குறிப்பிட்ட தொகையுடன் ஒப்பீடு செய்யப்பட்ட போது (+) 8.11% கூடுதலாகும். விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் அந்நிறுவனம் மதிப்பீட்டு (2013-14) விலையிலிருந்து (+) 4.98% கூடுதல் விலை விகிதாச்சாரத்தில் செய்து தர ஒப்புதல் தெரிவித்திருந்தார்.

மேற்கண்ட நிறுவனத்தின் விலை குறைப்புக்கு பின் உள்ள விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் கூடுதல் செலவீனத்தை மாநகராட்சியின் சொந்த நிதியில் ஏற்று பணியினை மேற்கொள்ளவும் மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>தீர்மானம் எண்.870</u>**
**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**6) <u>ம.பொ.4 / Est. 676 / 14-15</u>**

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு 17 எல்லீஸ் நகர் 70 அடி சாலையில் எல்லீஸ் நகர் பாலம் முதல் சர்வோதயா 4வது தெரு வரை (Reach I) சாலையை அகலப்படுத்தி தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.88,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஆணையாளரின் நிர்வாக ஒப்புதல் பெற்றும், மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்றும், டெண்டர் வரவழைக்கப்பட்டதில், மின்னனு ஒப்பந்தபுள்ளி மூலம் ('E' Tender) இரண்டு டெண்டர்கள் வரப்பெற்று அதில் M.அருள்ராஜ், மதுரை என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.002% குறைவாக கொடுத்துள்ள டெண்டரை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும், முன்ஒப்புதல் பெறப்பட்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலையும் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>தீர்மானம் எண்.871</u>**
**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**7) <u>ம.பொ.4 / Est. 677 / 14-15</u>**

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு 17 எல்லீஸ் நகர் 70 அடி சாலையில் சர்வோதயா 4வது தெரு முதல் ரிதம் Apartment வரை (Reach II) சாலையை அகலப்படுத்தி தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.88,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஆணையாளரின் நிர்வாக ஒப்புதல் பெற்றும், மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்றும், டெண்டர் வரவழைக்கப்பட்டதில், மின்னனு ஒப்பந்தபுள்ளி மூலம் ('E' Tender) இரண்டு டெண்டர்கள் வரப்பெற்று அதில் T.A.G.காமராஜ், மதுரை என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.001% குறைவாக கொடுத்துள்ள டெண்டரை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும், முன்ஒப்புதல் பெறப்பட்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலையும் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>தீர்மானம் எண்.872</u>**
**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**8) <u>ம.பொ.4 / Est. 678 / 14-15</u>**

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு 17 எல்லீஸ் நகர் 70 அடி சாலையில் சர்வோதயா ரிதம் Apartment முதல் பைபாஸ் சாலை சந்திப்பு வரை (Reach III) சாலையை அகலப்படுத்தி தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.88,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஆணையாளரின் நிர்வாக ஒப்புதல் பெற்றும், மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்றும், டெண்டர் வரவழைக்கப்பட்டதில், மின்னனு ஒப்பந்தபுள்ளி மூலம் ('E' Tender) இரண்டு டெண்டர்கள் வரப்பெற்று அதில் J.சௌந்திரபாண்டியன், மதுரை என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.003% குறைவாக கொடுத்துள்ள டெண்டரை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும், முன்ஒப்புதல் பெறப்பட்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலையும் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>தீர்மானம் எண்.873</u>**
**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**9) <u>ம.பொ. 2/ம.எண். (TURIP) சிப்பம் 1/14–15</u>**

மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பாதாள சாக்கடை பணிகள் நிறைவேற்றப்பட்ட போது பழுதடைந்த சாலைகளையும் மற்றும் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் அமைந்துள்ள முக்கிய சாலைகளையும் சீரமைக்க வேண்டி 18.335 கி.மீ. நீளத்திற்கு ரூ. 8.875 கோடியில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ''தமிழ்நாடு நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம் 2015ன்'' கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்புதல் (ந.க.எண். 14094/2014/E 3, நாள். 19.12.2014) பெறப்பட்டு கடந்த 09.01.2015 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்ற தீர்மானம் எண். 817, நாள். 09.01.2015) ஒப்புதல் பெறப்பட்டு, கடந்த 30.01.2015 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டது.

அவ்வாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் மூலம் ஒப்புநோக்கு செய்யப்பட்டு, அதன் பின் விலைப்புள்ளி திறக்கப்பட்டது. ஒப்பந்ததாரர்களால் விலைப்புள்ளியில் கொடுக்கப்பட்ட கூடுதல் விலை விகிதத்திற்கு விலை குறைப்பு

கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்ததாரர்களால் விலை குறைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | தலைப்பு | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* |
| 1 | தார் சாலை & பேவர் பிளாக் சாலை | ம.பொ. 4/ம.எண். TURIP சிப்பம் 1/2014–15 வார்டு எண். 5,8,11,15,16,20,21,22 ஆகிய பகுதிகளில் தார் சாலை மற்றும் வார்டு எண். 6,7,9,12 ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 219.25 | மெசர்ஸ். விக்னேஷ் & கோ., | நடப்பாண்டு (2014–15) விலை விகிதத்தினை விட 1.45% அதிகம். |
| 2 | தார் சாலை & பேவர் பிளாக் சாலை | ம.பொ. 4/ம.எண். TURIP சிப்பம் 2/2014–15 வார்டு எண். 17,18,19,27,34,37,39, 40,41,46 ஆகிய பகுதிகளில் தார் சாலை மற்றும் வார்டு எண். 36,37,39,47,52 ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 217.85 | திரு.T.A.G. காமராஜ் | நடப்பாண்டு (2014–15) விலை விகிதத்தினை விட 1.40% அதிகம். |
| 3 | தார் சாலை & பேவர் பிளாக் சாலை | ம.பொ. 4/ம.எண். TURIP சிப்பம் 3/2014–15 வார்டு எண். 53,54,64,67,71,72, 80,90,92 ஆகிய பகுதிகளில் தார் சாலை மற்றும் வார்டு எண். 51,63,68,74 ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 231.85 | மெசர்ஸ். சச்சின் கன்ஸ்ட்ரக்சன் | நடப்பாண்டு (2014–15) விலை விகிதத்தினை விட 1.40% அதிகம். |
| 4 | தார் சாலை & பேவர் பிளாக் சாலை | ம.பொ. 4/ம.எண். TURIP சிப்பம் 4/2014–15 வார்டு எண். 75,76,77,93,100 ஆகிய பகுதிகளில் தார் சாலை மற்றும் வார்டு எண். 73,87,89 ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 218.55 | திரு. அருள்ராஜ் | நடப்பாண்டு (2014–15) விலை விகிதத்தினை விட 1.27% அதிகம். |

மேற்கண்டவாறு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் தெரிவித்துள்ள விலை விகிதத்தினை ஏற்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. எனவே மேற்கண்ட விபரப் படி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதல் மற்றும் வேலை துவங்கும் உத்திரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.874**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) ம.பொ.2/000662/2015**

மதுரை மாநகராட்சி மையப் பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் அத்தியாவசியப் பணிகளான குடிநீர் பணிகள், பாதாள சாக்கடை பணிகள், சாலைப் பணிகள், தெருவிளக்கு பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் இதர பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு உரிய நிர்வாக ஒப்புதல் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனை மேலும் முறைப்படுத்தும் வகையில் மதிப்பீட்டுப் பணிகளை மதிப்பீட்டு தயார் செய்வது முதல் இறுதிப் பட்டியல் வழங்கும் வரையுள்ள பணிகளை முறையாக கண்காணிக்கும் வகையில் திரு.K.பத்மநாபன், முதுநிலைவரைதொழில் அலுவலர் (ஓய்வு) பொதுப்பணித்துறை அவர்களை பொதுப்பணித்துறை Schedule of Rateன் படி தொழில்நுட்ப உதவியாளருக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் ரூ.474/- ஊதிய விகிதத்தின் அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு ரூ.14220/- வீதம் நிர்ணயம் செய்து ஆணையாளர் ஒப்புதல் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்கள் ஒப்புதல் பெற்று மையப் பொறியியல் பிரிவில் 01.03.2015

முதல் பணிபுரிந்து வரும் திரு.K.பத்மநாபன் அவர்களுக்கு மேற்கண்ட காலத்திலிருந்து ஊதியம் வழங்க மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.875**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11) ம.பொ.2/26937/14**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழ் தமிழ்நாட்டின் 15 புராதன நகரங்களில் நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அபிவிருத்திப் பணிகள் தலா ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன் பேரில் இயக்குநர், நகர் மற்றும் ஊரக மேம்பாட்டுத் துறை அவர்களின் நேர்முக கடிதத்தில் (கடிதம் எண்.2825/2007/யுபி 1, நாள். 04.08.2014) மதுரை மாநகரில் புராதன நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது. அதன் அடிப்படையில் மதுரை மாநகராட்சி மண்டலம் 4, வார்டு எண்.96ல் உள்ள திருப்பரங்குன்றம் திருக்கோவிலுக்கு சொந்தமான சரவணப் பொய்கை பகுதியில் புராதன நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி, சிமெண்ட் கல்தளம், மின்விளக்கு வசதி, சுகாதார வசதி மற்றும் இதர அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும் பொருட்டு ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையின் பேரில் கடந்த 08.09.2014 அன்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு நகர் மற்றும் ஊரக மேம்பாட்டுத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் உறுப்பினர் செயலர் நகர் ஊரமைப்பு வாரியக் குழு மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயல் முறை ஆணை எண்.2825/2007/யுபி1 நாள் 25.03.2015ன் படி திருப்பரங்குன்றம் நகரில் திட்ட பணிகளை மேற்கொள்ள ரூபாய் 1.00 கோடி மானியம் வழங்கி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிர்வாக ஒப்புதலின் படி திட்ட பணிகளை மேற்கொள்ளவும் உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.876**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12) Jns2/ம.நி.2/18107/2014**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு இயக்கத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டு நகர உட்கட்டமைப்பு ஆளுமையின் கீழ் இரண்டாம் வைகை குடிநீர் திட்டம், வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல், திடக்கழிவு மேலாண்மை திட்டம், மழைநீர் வடிகால் திட்டம் மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டம் ஆகியவற்றிற்கு மத்திய மாநில மற்றும் மாநகராட்சி பங்களிப்புடன் நிறைவேற்ற அனுமதி பெறப்பட்டது. இதில் இரண்டாம் வைகை குடிநீர் திட்டம், வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல், திடக்கழிவு மேலாண்மை திட்டம் ஆகியவை முடிவுபெற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மழைநீர் வடிகால் திட்டம் 31.03.2015-ற்குள் வேலைகள் முடிவுபெற உள்ளது. இதில் பாதாள சாக்கடை திட்டம் சிப்பம் –I மற்றும் சிப்பம் –II கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பணிகள் முடிவு பெற்றுள்ளது. சிப்பம் –III க்கான விடுபட்ட பகுதிகளுக்கான பாதாள சாக்கடை அமைக்கும் பணி மற்றும் பழைய பாதாள சாக்கடை அமைப்புகளை புதியதாக மாற்றியமைக்கும் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கும்போது ஒப்பந்ததாரர் (தீபிகா இன்பிராடெக் லிட்.,) Arbitration சென்றதாலும் குறித்த காலத்தில் பணிகளை முடிக்க இயலாத காரணத்தினால் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு தற்போதைய விலை விகிதத்தின் அடிப்படையில் ரூ.82.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் பெற்று புதியதாக ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் மதுரை மாநகராட்சி பங்குத் தொகை ரூ.298.96 கோடி மேற்கண்ட திட்டங்களுக்கு வழங்க வேண்டிய நிலையில் நிதி பற்றாக்குறை காரணமாக அரசு சிறப்பு நிதியாக ரூ.250.00கோடி வழங்கியதன் காரணமாக பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் நகர்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதித் திட்டம் Phase –II மற்றும் Phase –III ஆகியவற்றில் ரூ.50.15கோடிக்கு பணிகள் முடிக்கப்பட வேண்டியுள்ளது. மதுரை மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் செயல்படுத்தப்பட வேண்டிய குடிநீர் வழங்கல் திட்டம், பாதாள சாக்கடை திட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், மழைநீர் வடிகால் திட்டம் ஆகிய உட்கட்டமைப்பு திட்டங்கள், மதுரை மாநகராட்சியில் ஏற்கனவே உள்ள பகுதிகளில் குடிநீர் வழங்கலை மேம்படுத்தும் திட்டம், நீர்பிடிப்புப் பகுதி மேம்பாட்டு திட்டம் ஆகியவற்றின் விரிவான திட்ட அறிக்கைகளை அரசு ஒப்புதல் பெற்று பணிகளை செயல்படுத்த வேண்டியுள்ளது.

மணலூரிலிருந்து குடிநீர் வழங்கும் குழாய்களை புனரமைக்கும் திட்டம், வைகை ஆற்றின் குறுக்கே ஆரப்பாளையம் – அருள்தாஸ்புரம் மற்றும் திருமலைராயர் படித்துறை (சிம்மக்கல்) – கோரிப்பாளையம் ஆகிய இடங்களில் உயர்மட்ட பாலம் கட்டும் திட்டம் ஆகிய

ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த பணிகளுக்கு மதுரை மாநகராட்சியில் உரிய பணியிடங்கள் பற்றாக்குறை உள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கண்காணிப்பு பொறியாளர் | 1 |
| 2 | செயற்பொறியாளர் | 2 |
| 3 | உதவி செயற்பொறியாளர் | 4 |
| 4 | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 8 |
| 5 | வரைவு அலுவலர் | 4 |
| 6 | தொழில்நுட்ப உதவியாளர் | 10 |
| 7 | கணக்கு அலுவலர் | 1 |
| 8 | கண்காணிப்பாளர் | 2 |
| 9 | உதவியாளர் | 4 |
| 10 | இளநிலை உதவியாளர் | 2 |
| 11 | உதவி திட்ட ஒருங்கிணைப்பாளர் | 1 |
| 12 | நகர திட்ட அலுவலர் | 1 |
| 13 | மண்டல திட்ட அலுவலர் | 4 |
| | **மொத்தம்** | **44** |

எனவே திட்டங்களை செயல்படுத்த, மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு 44 பணியிடங்களை 31.03.2015-லிருந்து மேலும் 2 (இரண்டு) ஆண்டுகளுக்கு அனுமதிக்க அரசுக்கு பிரேரனையை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.877**

**அரசுக்கு பிரேரனை அனுப்ப குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**13) Jns4/26631/2007**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம், மழைநீர் வடிகால் திட்டம் ஆகிய உள்கட்டமைப்புகள் மத்திய, மாநில நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டப்பணிகளை மதுரை மாநகராட்சி பகுதியில் செயல்படுத்துதல், திட்டப்பணி தொடர்பான தணிக்கை அறிக்கைகள், பணிமுன்னேற்ற ஆய்வுக் கூட்டங்களிலும், தள ஆய்வுகளிலும் உதவி புரிதல் போன்ற பணிகளையும் அயற்பணி அடிப்படையில் வேளாண்மை பொறியியல் துறையில் இருந்து பணிபுரியும் கீழ்கண்ட உதவி பொறியாளர்கள் கவனித்து வருகின்றனர்.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட பணிகளுக்கு தற்காலிகமாக ஒப்பளிக்கப்பட்ட பணி இடங்களில் அயற்பணி அடிப்படையில் அரசின் பிற துறையில் இருந்து உதவி பொறியாளர்களை பணி அமர்த்த வேண்டியுள்ளது. மேலும் மதுரை மநகராட்சியில் இருந்து இத்திட்ட பணிக்காக பொறியாளர்கள் தனியாக பயன்படுத்துவதற்கேற்ப உபரியாக உதவி பொறியாளர்கள் இல்லை. மேலும் இத்திட்டத்திற்கு முன் அனுபவம் உள்ள பொறியாளர்களை பயன்படுத்துவது அவசியமாகிறது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள பணிகளை 31.12.2015 – ற்குள் முடித்து மத்திய, மாநில அரசுகளுக்கு முடிவு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் தற்போது ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் 31.03.2015 – ற்குள் முடிவடைகிறது, எனவே இந்நிலைமை கருத்தில் கொண்டு கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள அலுவலர்களின் அயற்பணிக்காலத்தை 31.03.2015 வரை நீட்டிப்பு செய்ய முதன்மை செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை மற்றும் தலைமை பொறியாளர் (வே.பொ.து)க்கும் அனுமதி கோரி கடிதம் அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ.எண் | பெயர் | பதவி | அயற்பணி நீடிப்பு முடிவு பெற்ற நாள் | திட்ட பணி முடிக்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கு |
|---|---|---|---|---|
| 1 | திரு.மு.தேவராஜன் | உதவி பொறியாளர் | 31.03.2014 | 31.03.2015 |
| 2 | திரு.ந.செவ்வேள் | உதவி பொறியாளர் | | |
| 3 | திரு.அ.சொக்கலிங்கம் | உதவி பொறியாளர் | | |
| | | | | |

**தீர்மானம் எண்.878**

**அரசுக்கு கடிதம் அனுப்ப குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**14) Jns2/011937/2013-14**

குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியின் மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்துநிலையத்தில் உள்ள அனைத்து கழிப்பறைகள், உணவகங்கள், தங்கும் விடுதிகளில் வரும் கழிவுநீர், பாதாள சாக்கடை திட்டத்தின் மூலம் சேகரிப்பு செய்து கழிவுநீர் தொட்டி, கழிவுநீர் குழாய்கள் அமைத்து கோ.புதூர் தொழில்பேட்டை அருகிலுள்ள உப கழிவுநீர் உந்து நிலையத்தில் சேருமாறு திட்ட மதிப்பீடு 2013–2014–விலைவிகிதப்படி ரூ.58.70 இலட்சத்தில் தயார் செய்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் கழிவுநீர் தொட்டி கட்டும் பணி, கழிவுநீர் குழாய்கள் அமைக்கும் பணி, உணவகங்கள், தங்கும் விடுதிகள், உயர்நீதி மன்ற ஊழியர்கள் குடியிருப்பு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மண்டல அலுவலகங்கள் மற்றும் மண்டல தணிக்கை துறை அலுவலகம் ஆகியவற்றில் வரும் கழிவுநீரை வீட்டு இணைப்பு மூலம் அப்புறப்படுத்த ஏதுவாக இத்திட்டம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இதில் கலந்துகொண்ட (L1) ஒப்பந்தக்காரர் திரு.K.நல்லதம்பி, H.புதுப்பட்டி, தருமபுரி மாவட்டம் அவர்கள் 2014-15 மதிப்பீடு விலை விகிதத்தைவிட (-)7.31% குறைவாக விலைக் குறைப்பு செய்தபின் ரூ.60,45,482/- கொடுத்துள்ளார். இத்திட்டம் மிக அவசியம் எனக் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதனை ஏற்று மேற்படி திட்டத்தினை செயல்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.879**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**15) JnS5/1573/2012**

மேலூர் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு 13வது திட்ட ஒப்புதல் கண்காணிப்புக் குழு (PSLC) 23.02.2015-ல் நடைபெற்ற கூட்டத்தில் தொழிற்சாலைகளுக்குயென ஒதுக்கப்பட்ட 8.97 MLD குடிநீரை மேலூர் தரைமட்ட தொட்டியிலிருந்து மதுரை மாநகராட்சிக்கு வழங்க மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.4393.11 இலட்சம் IUDM நிதியில் தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி நிறுவனம் (TUFIDCO) மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மானியமாக ரூ.**3953.80** இலட்சமும், மீதமுள்ள தொகை ரூ.439.31 இலட்சம் வட்டியில்லா கடன் மூலம் பெற ஒதுக்கீடு செய்து கடிதம் எண். TUFIDCO / IUDM 2014 -15 / 3633 / AM (B) / 2015 / நாள். 6.03.2015 வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட கடன் தொகை ரூ.439.31 இலட்சத்தை வட்டியில்லாமல் மூன்றாண்டுகளில் காலாண்டு தவணைகளில் தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடன்உதவி பெறுவது தொடர்பான நடவடிக்கைக்கு மாமன்ற அனுமதியும், மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு கீழ்கண்டவாறு அதிகாரம் வழங்கி மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. Resolved that Madurai Corporation is authorizing the authorized signatory to borrow the interest free loan of **Rs.439.31 lakh** and grant of amount **Rs.3953.80 lakh** under IUDM for the project of “Re-allotment of 8.97 MLD of water allocated for Industrial demand under Mellur Combined Water Supply Scheme at Mellur Sump to Madurai Corporation”.
   தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி நிறுவனம் வழங்கும் வட்டியில்லா கடன் தொகை ரூ.439.31 இலட்சத்தை பெற மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அனுமதி வழங்க தீர்மானிக்கப்படுகிறது.
2. The authorized signatory be and hereby authorized to execute the loan cum grant agreement and other documents if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of Madurai Corporation on the documents to be executed with TUFIDCO on behalf of Madurai Corporation.
   மேற்கடன் தொகையை பெறுவதற்கு தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி நிறுவனத்துடன் இதர ஆவணங்களில் ஒப்புதல் செய்யும் அதிகாரம் ஆணையாளர் அவர்களுக்கு வழங்கி தீர்மானிக்கப்படுகிறது.
3. Resolved to repay the interest free loan as per the repayment schedule in the agreement.

மேற்கண்ட வட்டியில்லா கடன் தொகையை தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மூன்றாண்டுகளில் திரும்ப செலுத்தும் காலக்கெடுவிற்குள் செலுத்த ஒப்பந்தம் செய்யவும் தீர்மானிக்கப்படுகிறது.

4. Resolved that Madurai Corporation is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Madurai Corporation annual budget for the repayment of interest free loan for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without default.
   இத்திட்டத்திற்காக தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி மூலம் பெறப்படும் வட்டியில்லா கடன் தொகையை செலுத்துவதற்கு நிதிநிலை அறிக்கையில் உரிய ஒதுக்கீடுகள் செய்வதற்கு அனுமதி வழங்க தீர்மானிக்கப்படுகிறது.

மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு வட்டியில்லா கடன் தொகையை ரூ.439.31 இலட்சம் பெற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மானம் எண்.880**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**16) H6/18286/2014**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு இராஜாஜி மருத்துவமனையில் அம்மா உணவகம் திறக்கப்பட்டு 12.02.2014 முதல் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

மேற்கண்ட அம்மா உணவகத்தில் உணவு தயாரித்தல், பரிமாறுதல், டோக்கன் வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வரும் பாண்டி சங்கன் மகளிர் சேமிப்பு மற்றும் சிக்கன நாணய சங்கத்தின் 12 மகளிர் குழு உறுப்பினர்களின் பணிக்காலம் 10.02.2015 முதல் முடிவடைவதால் மேற்படி மகளிர் குழுவின் பணிக்காலத்தை 11.02.2015 முதல் 10.02.2016 வரை ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும், மேற்படி பணியாளர்கள் 11.02.2015 முதல் பணியாற்றிய காலத்தை ஏற்றும், மேற்படி பணியாளர்களுக்கான ஊதிய செலவினங்களை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**

மகளிர் குழு உறுப்பினர்களுக்கு நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.250/-

**தீர்மானம் எண்.881**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**17) H3/037971/2013**

மதுரை மாநகராட்சி – பொது சுகாதாரப்பிரிவு – நான்கு மண்டலங்களிலும் பணிபுரிந்து வரும் நிரந்தர ஆண் மற்றும் பெண் துப்புரவு ஊழியர்களுக்கு 2013-14ம் வருடத்திற்கான கைத்தறி மற்றும் கதர் சீருடைத் துணிகள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.2590797/-ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாண்புமிகு மேயர் அவர்கள் முன் ஒப்புதல் அளித்ததற்கு பின்னேற்பினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு :

| | | |
|---|---|---|
| கைத்தறி சீருடைத்துணிகள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் | – | ரூ. 8,99,224/- |
| கதர் சீருடைத் துணிகள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் | – | ரூ.16,91,573/- |
| மொத்தம் | – | ரூ.25,90797/- |

**தீர்மானம் எண்.882**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**18) H6/18803/14**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தேசிய நகர்ப்புற சுகாதார அமைப்பு திட்டத்தின் கீழ் 50,000 மக்கட்தொகைக்கு ஒரு நகர ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் 31 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இயங்கி வந்த 17 நலவாழ்வு மையங்கள் நகர ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டுள்ள நிலையில் சுப்பிரமணியபுரம், கொடிக்குளம், திரவியம் பிள்ளை

மகப்பேறுமனை, சோலையழகுபுரம் ஆகிய மருத்துவமனைகளை நகர ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற அரசின் அனுமதி பெற தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்களுக்கு பேரரணை அனுப்பி வைக்கவும், கொடிக்குளத்தில் இயங்கி வரும் மனநல மருத்துவமனையில் பணிபுரிந்த மருத்துவ அலுவலர் பணி ஓய்வு பெற்றுள்ளதால், மேற்படி மனநல மருத்துவமனையை காந்திபுரம் அம்மா உணவகம் அருகில் உள்ள துணை சுகாதார மையத்தில் செயல்படவும், மாதம் ரூ.30,000/- ஊதியம் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர் அல்லது பகுதி நேர மருத்துவ அலுவலர் ஒருவரை பணி அமர்த்தவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மானம் எண்.883**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**19) H6/9115/15**

மதுரை மாநகராட்சி தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் பகுதி அளவிலான கூட்டமைப்பின் (ALF) கீதம் பெண்கள் கூட்டமைப்பு அடுமனை பொருட்கள் (Backery Products) தயாரிக்கும் பயிற்சி மாநகராட்சி மூலம் பெற்று உள்ளதால் மேற்படி பயிற்சியை குழுவாக சேர்ந்து அடுமனை பொருட்கள் தயாரிக்கும் தொழில் செய்து வாழ்வாதாரம் மேம்பட மண்டலம் ஒன்றுக்கு உட்பட்ட தண்ணீர் தொட்டி வளாகத்தில் கீதம் பெண்கள் கூட்டமைப்பிற்கு ஒரு அறையினை ஒதுக்கீடு செய்யவும், இவ்வலுவலகத்தில் அனைத்து அடிப்படை வசதி செய்து கொடுக்கவும், நகர்ப்புற ஏழை மக்கள் ஒன்று சேர்ந்து குழுக்களாக அமைத்து பெண்கள் அமைப்பாக திகழ்ந்து தொழில் செய்வதால் ஒரு வருட காலத்திற்கு வாடகை இல்லாமல் இலவசமாகவும், தொழில் செய்து உற்பத்தி பெருக்கி வருமானம் பெற்று லாபம் ஈட்டும் நேரத்தில் ஒரு வருடம் கழித்து மாதம் ஒன்றுக்கு குறைந்த வாடகையாக ரூ.1000/- நிர்ணயம் செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மானம் எண்.884**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**20) மவ3/மபொ4/Est.No.10656/14-15**

மதுரை மாநகராட்சி மண்டலம்–2 இரத்தினசாமி நாடார் ரோடு உழவர் சந்தை எதிர்புறம் உள்ள மாநகராட்சி பாண்டியன் நெடுஞ்செழியன் மேல் நிலைப்பள்ளி வளாகத்தின் மேற்கு பகுதியில் உள்ள காலியிடத்தில் 16x10 அளவில் கட்டப்பட உள்ள 14 கடைகள் Zero Budget அடிப்படையில் கட்டி பொது ஏலம் மூலம் உயர்ந்த பட்ச கேள்விதாரர்களுக்கு கடை ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.885**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**21) மவ3/மபொ5/Est No.385/2014-15**

மதுரை மாநகராட்சி மண்டலம் -4 வார்டு எண்.80 திரு.வி.க. சாலை (ஒர்க்ஷாப் ரோடு) மாநகராட்சி பொது பண்டக சாலை முன்புறம் உள்ள காலியிடத்தில் 10x10 என்ற அளவில் கட்டப்பட உள்ள 19 கடைகள் zero Budget அடிப்படையில் கட்டி பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.886**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**22) மவ3/மபொ4/Est., No843/14-15**

மதுரை மாநகராட்சி மண்டலம் -2 வார்டு எண்.44 மாட்டுத்தாவணி மேலூர் சாலையில் புதிதாக கட்டப்பட உள்ள 20x28 அளவில் 10 கடைகள் Zero Budget அடிப்படையில் கட்டப்பட உள்ள கடைகளை பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.887**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**23) மவ3/மபொ4/Est., No844/14-15**

மதுரை மாநகராட்சி மண்டலம் -2 வார்டு எண்.44 மாட்டுத்தாவணி மேலூர் சாலையில் புதிதாக கட்டப்பட உள்ள 20x28 அளவில் 15 கடைகள் Zero Budget அடிப்படையில் கட்டப்பட உள்ள கடைகளை பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.888**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**24) மவ3/மபொ2/012746/14-15**

மதுரை மாநகராட்சி மண்டலம் -2ல் வார்டு எண்: 34 சினிபிரியா தியேட்டர் எதிர்புறம் பெட்ரோல் பங்க் சந்து, அண்ணா நகர் 1வது கிழக்கு மெயின் ரோட்டில் உள்ள காலியிடத்தில் 7 ¾ x7 = 54.25 சதுர அடி அளவில் தரைக்கடைகள் அமைக்க காலியிடம் (151 கடைகள்) பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.889**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**25) மவ4/01362/14**

மதுரை மாநகராட்சி எல்லைக்குள் பதிக்கப்பட்டுள்ள ஆப்டிக்கல் பைபர் கேபிள் (OFC) பதிக்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி கேபிள் பதித்துள்ளதற்கு அரசாணை எண் 7 தகவல் தொழிற்நுட்பதுறை நாள்:12.02.2001-யின் படி ஒரு வருடத்திற்கு ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.6300/- என தட வாடகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்படி (Cable Track Rent) தட வாடகை தொகையினை பல நிறுவனங்கள் முறையாக உரிய காலத்தில் செலுத்தாமல் நிலுவையாக உள்ளது. இதனால் மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

எனவே கேபிள் பதித்தமைக்கான தடவாடகையினை உரிய காலத்தில் செலுத்துவதை ஒழுங்குப்படுத்தவும் மாநகராட்சிக்கு வருவாயினை கருத்தில் கொண்டும் 2015ம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி முதல் நிலுவையில் உள்ள தட வாடகைக்கு 12% அபராதம் விதிக்க மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்றதற்கு மாமன்றத்தின் பின்னேற்பை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.890**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**26) மவ3/13920/2013**

மதுரை மாநகரின் மையப்பகுதியான யானைக்கல், சிம்மக்கல், வடக்குமாசி வீதி, வக்கீல் புதுத்தெரு, ஆகிய பகுதிகளில் பழக்கடை கமிஷன் மண்டி, பழக்கடை வியாபாரம் நடைபெற்று வருகிறது. இதனால் அப்பகுதியில் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. பழக்கடை வியாபாரம் நடக்கும் பகுதியில் வியபார நேரத்தில் குப்பைகளை அகற்ற இயலாத நிலை இருப்பதால் பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படுகிறது. பழக்கடை கமிஷன் வியாபாரபகுதியில் போக்குவரத்து நெரிசலின் காரணமாக அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வரும் யாத்திரிகர்கள் மற்றும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேற்க்கண்ட பகுதியில் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு மாட்டுத்தாவணி சென்ட்ரல் மார்க்கெட்டின் வடபுறம் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான சுமார் **4.86** ஏக்கர் காலி இடத்தில் பழக்கமிஷன் மண்டி மற்றும் பழ வியாபாரம் ஆகியவற்றிற்கான வணிகவளாகம் அமைக்க ம.வ.3/13920/2013-ன் படி மாமன்றத் தீர்மான எண்: 378 நாள் : **17.05.2013–**ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ஒருங்கிணைந்த நகர போக்குவரத்து மேம்பாடு திட்ட அறிக்கையில் பழக்கமிஷன் வணிக வளாகம் நகரின் மையப்பகுதியில் இருந்து மாற்றப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இதன்படி மாமன்ற தீர்மானம் எண் :378 நாள் : **17.05.2013–**ன்படி மாட்டுத்தாவணியில் பழக்கடை வணிகவளாகம் அமைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டமைப்புக்கு உத்தேசமாக ரூ.16 கோடிக்கு மதிப்பீடு ஆகும் என்பதால் தற்போது நிதிநிலையை கருத்தில் கொண்டு செலவுத் தொகையை பழக்கடை வணிகர் சங்கம் மூலம் பெற பல்வேறு கட்டமாக மாண்புமிகு மேயர் அவர்களின் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இறுதிகட்ட பேச்சுவார்த்தையில் பழக்கடை வணிகர் சங்கத்தின் பங்களிப்பு தொகையாக ரூ.11.84 கோடி தருவதாக ஒப்புக் கொண்டுள்ளனர்.

எனவே, பழக்கடை வணிக வளாகம் அமைக்க மதிப்பீட்டிற்கான செலவுத் தொகையை பழக்கடை பயனாளிகளின் முன் வைப்புத் தொகையை வைத்தும், விளம்பர நிறுவனத்திடம் இருந்து பெறப்படும் வாடகை தொகை மற்றும் வாகன நிறுத்தும் இடத்திற்கான வாடகை ஆகியவற்றில் இருந்து பெறப்படும் தொகை ஆகியவற்றின் மூலம் பழக்கடை கட்டுமான பணியை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மானம் எண்.891**
**பழவியாபாரிகளிடம் பெறப்படும் முன்வைப்பு தொகைக்கு ஏற்ப இத்திட்ட மதிப்பீடுகளை பல சிப்பங்களாக மாமன்ற நிர்வாக அனுமதிக்குள் பிரித்து பணி தொய்வின்றி நடைபெற தீர்மானிக்கப்படுகிறது.**

**27) L1/003085/2015**

மதுரை மாநகராட்சி சட்டப்பிரிவில் பெறப்படும் புதிய வழக்குகளுக்கான வாதுரையின் நகல்கள், எதிர்வாதுரை நகல்கள் நீதிமன்றத்தில் பெறுவதற்கும் இதர அலுவலக செலவுகளுக்கும் பணம் தேவைப்படுவதால் அலுவலக பணிகளுக்காக சட்ட அலுவலருக்கு ரூ.5000/- கையிருப்பு தொகை வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.892**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**28) மநி25/009710/15**

மதுரை மாநகராட்சி மண்டலம் **4** வார்டு **95** மற்றும் வார்டு எண்.**99**ல் துப்புரவு ஊழியர்களாகப் பணிபுரிந்து வரும் திரு.வேலுச்சாமி, திரு.வெள்ளிமைல மற்றும் திரு.வீராச்சாமி ஆகியோர் திண்டுக்கல்லிருந்து அதிகாலை 3.30மணிக்கு புறப்பட்டு காலை 6.00 மணிக்கு அலுவலகத்தில் பெயரை பதிவு செய்து பணி முடித்து மாலையில் வீடு திரும்புகின்ற வகையில் மாதம் ஒன்றுக்கு பேருந்து பயணச்செலவாக ரூ.3000/- மற்றும் உணவு செலவு ரூ.1000/-ம் போக மீதம் உள்ள தொகையை குடும்பம் நடத்த குழந்தைகளை படிக்க வைக்க இன்னும் பிற குடும்ப தேவைகளுக்கும் மிகுந்த சிரமம் ஏற்படுவதால் குடும்ப சூழ்நிலைகளினால் தங்களை திண்டுக்கல் மாநகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதல் செய்து வழங்க கோரியுள்ளார்கள்.

எனவே, மேற்கண்ட பணியாளர்களின் குடும்ப சூழ்நிலை கருத்திற்கொண்டு மதுரை மாநகராட்சியிலிருந்து திண்டுக்கல் மாநகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதல் செய்ய மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மானம் எண்.893**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**29) ந.க.எண்.பவெ7/2014**

மதுரை மாநகராட்சியின் மாமன்ற தீர்மானம் எண்.786, நாள்:-12.11.2014 உள்ளாட்சிநிதித் தணிக்கைத் துறையினரால் 1967-68 முதல் 2011-12 முடிய எழுப்பப்பட்டுள்ள தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்வதற்கு மாநகராட்சி போதிய அனுபவம் உள்ள பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் உள்ளாட்சிநிதி தணிக்கைத் துறையில் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் தணிக்கைப் பணிகளிலும் தடைநீக்கப் பணிகளிலும் தொடர்ந்து 30 ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றிய 3 ஓய்வுபெற்ற ஆய்வாளர்கள் 15.09.2014 முதல் 14.03.2015 வரை 6 மாதக் காலத்திற்கு தலா ரூபாய்.15000/-வீதம் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக் காலத்தில் மொத்தம் 1680 தணிக்கைத் தடைகளுக்கு பதில்கள் தயாரிக்கப்பட்டு அவைகளில் 1251 பத்திகள் இதுநாள்வரை தணிக்கை அறிக்கையில் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் தொடர்ந்து தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்வதற்கு கீழ்க்கண்ட இரு பணியாளர்களை

| **வ.எண்.** | **பெயர்** | **முன்பு வகித்த பதவி** | **ஓய்வுபெற்ற நாள்** |
|---|---|---|---|
| 1. | திரு. கு.நசீர் பாட்சா | ஆய்வாளர் | 29.02.2012 |
| 2. | திரு. மு.முத்துச்சாமி | ஆய்வாளர் | 31.10.2012 |

மேற்கண்ட நபர்களுக்கு மாதம் ரூ.15000.00(பதினைந்தாயிரம்) வீதம் வழங்கங்கிடவும் இதனால் மாநகராட்சிக்கு மாதம் ஒன்றிற்கு கூடுதல் செலவினம் ரூ.30000.00(முப்பதாயிரம்) வீதம் தொடர்ந்து **ஆறு மாதங்களுக்கு** ரூ.180000.00 (ஒரு லட்சத்து எண்பதாயிரம்) செலவிடவும், **ஆறு மாதங்களுக்கு** பணியாற்றிட அனுமதி வழங்கி, மேற்கண்ட நபர்களுக்கு மாதாந்திர தொகுப்பூதியம் மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் இருந்து வழங்க மாண்புமிகு மேயர் முன்ஒப்புதல் வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.894**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**

**மேயர்**

**மதுரை மாநகராட்சி**

**மதுரை**

**நாள் : 22.04.2015**

# மதுரை மாநகராட்சி
# மாமன்றக் கூட்டம்
# Table Agenda - நாள் : 24.04.2015

1) **B1/027462/2012**

மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நிதித்துறை அரசு ஆணை எண்.121, நாள்:22.04.2015–ன் பிரகாரம் தமிழ்நாடு அரசு ஊழியர்களை போல் 01.01.2015 முதல் அகவிலைப்படி 107 சதவிகிதத்திலிருந்து 113 சதவிகிதமாக உயர்த்தி வழங்கியும், 01.01.2015 முதல் 31.03.2015வரை நிலுவைத் தொகை வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அகவிலைப்படி நிலுவையை வழங்கி வெளியிடப்பட்ட அரசு ஆணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : உத்தேச செலவு ரூ.145.00 இலட்சம்

**தீர்மானம் எண்.895**
**பதிவு செய்யப்பட்டது.**

2) **H6/09116/14**

மதுரை மாநகராட்சி தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் துணைத் திட்டமான சமூக அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் நிறுவன மேம்பாடு திட்டத்தின் கீழ் செயல்படும் ஸ்ரீபாலாஜி மகளிர் சுய உதவிக்குழு எஸ்.எஸ்.காலனி, மதுரை–16 மூலம் பேப்பர் கப், பேப்பர் பை மற்றும் பேப்பர் பிளேட் தயாரிக்கும் சிறு தொழில் செய்வதற்கும் மகளிர் சுய உதவிக்குழு கூட்டமர்வு மற்றும் பயிற்சி கூட்டம் நடத்துவதற்கும் மண்டலம் –1 வார்டு எண்.3 மிளகரணை சமுதாய கூட கட்டிடத்தை பயன்படுத்திக் கொள்ள

1. மும்முனை மின் இணைப்பு வசதி
2. அடிப்படை வசதிகள் செய்து கொடுத்து

மேற்படி கட்டிடத்தை மாத வாடகையாக ரூ.1000/- நிர்ணயம் செய்து மேற்படி மகளிர் சுய உதவிக்குழுவிற்கு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மானம் எண்.896**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : 24.04.2015

***நன்றித் தீர்மானம்–1***

ஏழை, எளிய மக்களின் வயிற்று பசியினை போக்க, மாதம் தோறும் 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கிய வாழும் அன்னபூரணி, ஏழை பெண்களின் திருமணத்திற்கு, தாலிக்கு தங்கம் திட்டம் வழங்கிய தரணி போற்றும் தங்க தாரகை, தமிழகத்தில் முதியோர் மற்றும் ஆதரவற்றோர் 37 இலட்சம் பேருக்கும் மாதம்தோறும் ரூபாய் 1,000/- உதவித்தொகை வழங்கிய ஏழை எளிய மக்களின் காவல் தெய்வம், ஏழை எளிய மாணவர்களுக்கு, எட்டா கனியாக இருந்த மடிக்கணினியை எட்டும் கனியாக மாற்றிய, உலக வரலாறு போற்றும் 7 கோடி மக்களின் ஒளி விளக்கு, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், சூதுமதி கூடத்தின் சூழ்ச்சி அரசியலை தோற்கடித்து, மீண்டும் தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சராக அரியணையில் அமரும் நாள் வெகுதோலைவில் இல்லை. அந்நாளுக்காக மதுரை மக்களின் சார்பாக, இம்மாமன்றத்தில் இறைவனை பிரார்த்தனை செய்வதோடு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்வழி காட்டுதல்படி மக்கள் பணியாற்றுவோம் என்று சூளுரைப்போம்.

**தீர்மானம் எண்.852**

**மேயர்**

***நன்றித் தீர்மானம்–2***

தமிழகத்தைச் சேர்ந்த 20 அப்பாவி கூலித் தொழிலாளர்கள் மீது, ஆந்திர மாநில காவல்துறை கொடூரமாக சுட்டுக் கொலை செய்யப்பட்டதை, கடுமையாக கண்டித்தது மட்டுமல்லாது, பழியான 20 அப்பாவி கூலித் தொழிலாளர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும், மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, செயல்படும் தமிழக அரசின் சார்பில் ரூபாய் 3 இலட்சம் நிதி உதவி வழங்கியும், அம்மாவின் சார்பில் ரூபாய் 2 இலட்சம் நிதி உதவியை வழங்கியும், ஆக மொத்தம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூபாய் 5 இலட்சம் வழங்கி அவர்களின் குடும்பத்தை காப்பாற்றிய மனிதநேய தலைவி மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களை இம்மாமன்றக் கூட்டம் பொற்பாதம் பணிந்து கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம் எண்.853**

**மேயர்**

***நன்றித் தீர்மானம் –3***

மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்வழி காட்டுதல்படி மக்கள் பணியாற்றும் அம்மாவின் அரசின் மீது குறை கூற முடியாமல் தன் அரசியல் அற்ப பிழைப்பிற்காக தினம் தினம் பொய்யான புழுகு அறிக்கையை விட்டு வரும் தீயசக்தி கருணாநிதி தன் குடும்ப சுயநலத்திற்காக தமிழகத்தின் ஜீவாதார உரிமைகள் எல்லாம் தாரைவார்த்துக் கொடுத்து தமிழக மக்களுக்கு பல்வேறு காலகட்டங்களில் மாபெரும் துரோகங்களை செய்ததை மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்வதோடு தீயசக்தி கருணாநிதி பராசக்தி கதை வசனம் போல் காலத்திற்கும் ஒவ்வாத வகையில் நீதித்துறை உட்பட அனைத்து துறைகளின் மீது, மக்கள் விரோத கற்பனையுடன் பொய்யான அறிக்கைகளை கூறிவரும் கபடவேடதாரி தீயசக்தி கருணாநிதியை இம்மாமன்றக் கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

**தீர்மானம் எண்.854**

**மேயர்**